தயா

***கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க இஸ்லாமியர்கள் ஏராளமாக வருகை தந்தனர். இஸ்லாமியபிரமுகர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளார்கள். கவிக்கோ அப்துல் ரஹ்மான், பேராசிரியர் அப்துல்காதர், பேராசிரியர் காதர் மொகைதீன், திருப்பூர் அல்தாப், கவிஞர் சல்மா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். இவர்களில் காயிதே மில்லத் பேரனும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் மாநிலத் தலைவருமான தாவூத் மியான்கானை தமிழன் எக்ஸ்பிரஸுக்காக சந்தித்து, தமிழ் செம்மொழி மாநாட்டில் இஸ்லாமியர்களின் பங்கு பற்றி அவரிடம் சில கேள்விகளை முன் வைத்தோம்.***
***இதோ அவரது பதில்கள்:***

# "சிறுபான்மை மக்களின் அரசு தி.மு.க."!

## —காயிதே மில்லத் பேரன் பேட்டி!

**❊ உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு உங்கள் பார்வையில் எப்படி?**

இதுவரை கண்டிராத, இந்தியாவில் எங்கும் நடந்திராத வகையில் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இம்மாநாட்டைப் போன்று ஒரு சிறப்பு எந்த மாநாட்டிலும் இல்லவே இல்லை எனலாம். அரங்கங்கள் மட்டுமல்ல... மாநாட்டின் அத்தனை நிகழ்வுகளும் வரலாற்றில் நிச்சயம் இடம்பெறும் வகையில் அமைந்திருக்கின்றன.

**❊ இந்த மாநாட்டில் நீங்கள் ரசித்தது என்ன?**

சுமார் அறுநூறு, எழுநூறு ஆண்டுகளில் இல்லாத எழுச்சி, தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் கிடைத்திருக்கிறது என்பதை உணரமுடிகிறது. அமைக்கப்பட்டு இருக்கும் கண்காட்சி அரங்கங்கள், அதைப் பொதுமக்கள் பார்வையிடும் அளவுக்கு ஏற்பாடுகள் என அனைத்துமே மிகப்பிரமாதம். இந்த மாநாடு உலக அரங்கில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டியவை.

**❊ முஸ்லிம் லீக்கின் பங்களிப்பு மாநாட்டில் எப்படியிருக்கிறது?**

காயிதே மில்லத் தமிழ் மீது கொண்டுள்ள பற்றை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதற்காக அரசியல் நிர்ணய சபையில் முதன் முதலில் குரல் கொடுத்தவர் காயிதே மில்லத் என்பது வரலாற்று உண்மை. அவரின் கருத்து முழக்கத்தை உலகம் முழுவதும் ஆயிரம் மேடைகளில் எடுத்துச் சென்ற பெருமை பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரைச் சாரும். அண்ணா நடத்திய முதல் உலகத்தமிழ் மாநாட்டில் முதல் மரியாதை காயிதே மில்லத்துக்குதான் கொடுக்கப்பட்டது என்பதிலிருந்தே தமிழோடு காயிதே மில்லத்துக்கு இருந்த பற்றும், பாசமும் தெரியும். இப்போது நடக்கும் இந்த முதல் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் உலகமே கலைஞரை வியந்து பாராட்டுகிறது. கடந்த சில மாதங்களாகவே தமிழகம் முழுவதும் நாங்கள் சுற்றுப் பயணம் செய்து, இந்த மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விளக்கிக் கூறியதோடு, மாநாட்டுக்கு தவறாமல் வரும்படி அழைப்பு விடுத்தோம். அந்த வகையில் இந்த மாநாடு சிறப்பாக அமைய நாங்கள் தமிழகம் முழுவதும் உள்ளவர்களை பிரச்சாரம் செய்து அழைத்து வந்திருக்கிறோம்.


தாவூத் மியான்கான்

**❊ சிறுபான்மை மக்களுக்கு தி.மு.க. அரசின் ஆதரவு எந்த அளவுக்கு இருக்கிறது?**

1967ல் தி.மு.க.வுடன் காயிதே மில்லத் ஏற்படுத்திய கூட்டணி இன்றைக்கும் தொடர்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை சிறுபான்மை மக்களின் அரசாகத்தான் தி.மு.க. அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அறுபதாண்டுகளாக சிறுபான்மை மக்களின் கோரிக்கையான, 'சட்ட அங்கீகாரம்' என்பதை கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசுதான் வழங்கி இருக்கிறது. இந்தியாவிலேயே சிறுபான்மை மக்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கிய 6வது மாநிலம் தமிழகம் தான் என்று பெருமை படச் சொல்லிக் கொள்ள முடியும். சிறுபான்மை மக்கள் போற்றும் ஆட்சியாகவும், இந்த மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியாகவும் இந்த ஆட்சி விளங்குகிறது என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

**❊ இந்த மாநாட்டில் உங்கள் தனிப்பட்ட பங்கு என்ன?**

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாநாட்டில் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற தலைப்பில் நான் உரையாற்ற உள்ளேன். தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, சிறுபான்மை மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாக இந்த மாநாடு அமைந்து இருக்கிறது. இந்த மாநாட்டை தலைமையேற்று நடத்தும் கலைஞரின் புகழ் உலக அரங்கில் பொன் எழுத்துக்களால் பதிவு செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை. இஸ்லாமிய மக்களும் இந்த மாநாட்டுக்கு அதிக அளவு வருகை தந்து கலைஞருக்கு மேலும் சிறப்பு சேர்ப்பார்கள். அறிவியல் வளர்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில், தமிழ் மொழி பல பரிணாமங்களை எடுத்திருக்கிறது. இதன் உச்சத்தை இந்த மாநாட்டில் ஒவ்வொரு தமிழனும் காணலாம். இப்படியொரு எழுச்சி கடந்த 600 ஆண்டுகளில் இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

**படங்கள்: ஒலம்பஸ் ஹரி**